# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## திருச்சிராப்பள்ளி - 620 024

**முனைவர். க.கோபிநாத்** தொலைபேசி : 0431-2407092
பதிவாளர் தொலைப்படி : 0431-2407045


**கடித எண்.29752 /டி1/2019, நாள்: 02.04.2019**

பெறுநர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்றக் கல்லூரிகள் /
ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: இணைவு - தற்காலிக இணைவு பெற்ற பாடவகுப்புகளுக்கு **2019-2020**-ஆம் கல்வியாண்டிற்கான இணைவு நீட்டிப்பு வழங்குதல் - பாடவகுப்புகளின் பட்டியல் மற்றும் கட்டணம் செலுத்தக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள். 29.03.2019

------

தங்கள் கல்லூரி / ஒப்புதல் பெற்ற நிறுவனத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பாடவகுப்புகளுக்கு **2019-2020-**ஆம் கல்வியாண்டிற்கு இணைவு / ஒப்புதல் நீட்டிப்பு பெறுவதற்கானக் கருத்துருவினை எதிர்வரும் **31-05-2019-**ஆம் தேதிக்கு முன்னதாகத் தவறாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், **தற்காலிக இணைவு / ஒப்புதல் நீட்டிப்புச் செய்வதற்காக ஒவ்வொரு பாட வகுப்பிற்கும் (நிரந்தர இணைவு பெற்ற வகுப்புகள், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆய்வியல் அறிஞர் வகுப்புகள் நீங்கலாக) பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டண விபரங்கள் பின்வருமாறு:**

….2.

| Extension of Provisional Affiliation Fee (Except Government & Constituent Colleges) | | |
|---|---|---|
| Completed years | **Below 1000 students (First year admission)** | **Above 1000 students (First year admission)** |
| 1-5 years | **Rs.4000/- + (18% GST Rs.720/-)** | **Rs.5000/- (18% GST Rs.900/-)** |
| 6th year | **Rs.5000/- + (18% GST Rs.900/-)** | **Rs.6000/- + (18% GST Rs.1080/-)** |
| **Add Rs.1000/- every year (eg.7th year Rs.6000/- & Rs.7000 +GST 18% respectively, 8th year Rs.7000/- & Rs.8000/-+GST 18% respectively)** | | |

இக்கட்டணத்தைப் **பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளம் வாயிலாக** மட்டுமே செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பல்கலைக்கழக விதிமுறைகளின்படி, பல்கலைக்கழகத்திடமிருந்து தற்காலிக இணைவு / ஒப்புதல் நீட்டிப்பு ஆணை பெறாமல் 2019-2020-ம் கல்வியாண்டில் கல்லூரிகள் / நிறுவனங்கள் எந்த ஒரு பாட வகுப்பிற்கும் மாணவர் சேர்க்கை செய்யக்கூடாது எனவும் தெரிவிக்கலாகிறது.**

மேலும், கல்லூரியில் நடத்தப்படும் வகுப்புகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கோ அல்லது நிரந்தரமாக நிறுத்துவதற்கோ கல்லூரி நிர்வாகம் விருப்பப்பட்டால், ஆட்சிக்குழுவின் முன்னனுமதி பெறுவதற்காக அதனை முன்கூட்டியே பல்கலைக்கழகத்திடம் தெரிவிக்க வேண்டும். தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வகுப்பினை மீண்டும் தொடங்குவதற்கு கல்வியாண்டு தொடங்கும் முன்பே பல்கலைக்கழகத்தின் முன்னனுமதி பெற்று அப்பாடவகுப்பினை நடத்த வேண்டும் எனவும் தெரிவிக்கலாகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முறையான படிவத்தினை (Proforma) பூர்த்தி செய்து அனுப்புவதுடன், அதனில் குறிப்பிடப்பட்டுள்ள பாடவகுப்புகளுக்கு (நிரந்தர / தற்காலிக ஆணை வழங்கும்போது) ஆய்வுக்குழு பரிந்துரை செய்த நிபந்தனைகளை நிறைவேற்றிவிட்டது என்ற உறுதிமொழியைத் தெரிவிக்க வேண்டும். மேலும், கல்லூரியில் நடைபெற்று வரும் அனைத்து (தற்காலிக / நிரந்தர) வகுப்புகளின் (இளநிலை, முதுநிலை, பட்டயம், முதுகலைப் பட்டயம், சான்றிதழ், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆய்வியல் அறிஞர்) விவரங்களை அதற்கான பத்தியில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு பாடவகுப்புகளின் விவரம் தெளிவில்லாத நிலையில் பெறப்படும் கருத்துருக்கள் திருப்பியனுப்பப்படும் எனத் தெரிவிக்கலாகிறது.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு: படிவ வடிவம்

**பதிவாளர்**

**குறிப்பு:** **பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு/மாதிரிக் கல்லூரிகள் மற்றும் அரசு கல்லூரிகளுக்கு தற்காலிக இணைவு நீட்டிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

## தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற வகுப்புகளுக்கு 2019-2020-ஆம் கல்வியாண்டிற்கு இணைவு/அனுமதி நீட்டிப்பு பெறுவதற்கான படிவ வடிவம்

<table>
<tr><td>01.</td><td colspan="4">கல்லூரியின் பெயர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>02.</td><td colspan="4">கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு</td><td colspan="2"></td></tr>
<tr><td>03.</td><td colspan="4">கல்லூரி முதல்வரின் பெயர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>04</td><td colspan="4">கைபேசி / தொலைபேசி எண்</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="4">05</td><td colspan="6">தற்காலிக/நிரந்தர இணைவு/ அங்கீகாரம்/ஒப்புதல் பெற்று நடத்தப்படும் அனைத்து பாடவகுப்புக்களின் விவரங்கள்:<br>(U.G. / P.G. / Dip. / P.G., Dip./ Certificate Courses and M.Phil. & Ph.D.)</td></tr>
<tr><td>வ. எண்</td><td colspan="3">அரசு உதவிபெறும் வகுப்புகள் / சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளின் பெயர்</td><td>ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை</td><td>தற்காலிக மற்றும் நிரந்தர இணைவு / ஒப்புதல் பெற்ற ஆண்டு (கடித எண் மற்றும் நாள்)</td></tr>
<tr><td></td><td colspan="3"></td><td></td><td></td></tr>
<tr><td></td><td colspan="3"></td><td></td><td></td></tr>
<tr><td>05.</td><td colspan="4">2018-2019-ஆம் கல்வியாண்டு வரை மேற்கண்ட வகுப்புகளுக்கு தற்காலிக இணைவு / ஒப்புதல் நீட்டிப்பு பல்கலைக்கழகத்திடம் பெறப்பட்டுள்ளதா?</td><td colspan="2"></td></tr>
<tr><td>06</td><td colspan="4">2018-2019-ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையின்றி வகுப்புகள் ஏதேனும் இருப்பின் அதன் விவரம்:</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="3">07</td><td colspan="6">2019-2020 கல்வியாண்டிற்கு தற்காலிக இணைவு / ஒப்புதல் நீட்டிப்புச் செய்வதற்கானக் ஒவ்வொரு பாட வகுப்பிற்கும் (நிரந்தர இணைவு பெற்ற வகுப்புகள், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆய்வியல் அறிஞர் வகுப்புகள் நீங்கலாக) கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணம் செலுத்திய விவரம்</td></tr>
<tr><td colspan="2">வங்கியின் பெயர்</td><td colspan="3">இணையதள ரசீது எண் மற்றும் நாள்</td><td>தொகை</td></tr>
<tr><td colspan="2"></td><td colspan="3"></td><td></td></tr>
</table>

### சான்றிதழ்

இணைவு பெற்று கல்லூரியில் நடத்தப்படும் தற்காலிக மற்றும் நிரந்தர இணைவு / ஒப்புதல் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஆய்வுக்குழு பரிந்துரை செய்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று உறுதியளிக்கின்றேன்.

**முதல்வரின் கையொப்பம்**

**குறிப்பு: பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரிகள் மற்றும் அரசு கல்லூரிகளுக்கு தற்காலிக இணைவு நீட்டிப்புக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**